எடுத்துச் சென்று புதிய பாடப் பிரிவுகளைத் தொடங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 55, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**55—**

## இரயில்வே மேம்பாலம்

***35759—திரு. வி.எஸ். இராஜி:**

*மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*செய்யூர் தொகுதி, செய்யூர்-வந்தவாசி சாலை, சோத்துப்பாக்கம் பகுதியில் இரயில்வே மேம்பாலம் அமைக்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*செய்யூர் தொகுதி, செய்யூர்-வந்தவாசி சாலையில் சோத்துப்பாக்கத்தில் இரயில்வே மேம்பாலம் அமைப்பது குறித்து அரசு ஆய்வு செய்து வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி அவர்கள்.*

**திரு. வி.எஸ். இராஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈன்ற தாயினும் மேலாக தமிழக மக்கள்மீது பற்றும் பாசமும் கொண்டு, கல்வி என்ற அழியாத சொத்தை தமிழக மக்களுக்கு அளித்த எங்கள் கலைத் தாயின் தலைமகள், அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*அம்மா, தமிழகத்தில் தாங்கள் கொண்டுவரும் சாதனைத் திட்டங்களுக்கு இடையே தேர்தல் கூட்டணி பேரம் பேசும்*

[2014 பிப்ரவரி 17

எதிரிகளின் சிந்தனையைக்கூட செயல் இழக்கவைத்த எங்கள் தன்னிகரற்ற தலைவியே, இன்று தள்ளு வண்டியும், தண்ணீர் வண்டியும் திக்குத்தெரியாத காட்டில் கூட்டணி அமைக்க முடியாமல் திணறிக்கொண்டிருக்கின்ற வகையிலே, தமிழகத்தில் சாதனைத் திட்டங்களை தமிழகத்திலே சிறப்பாகச் செயல்படுத்துகின்ற தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு மீண்டும் நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். நான் செய்யூர்-வந்தவாசி சாலையில் இரயில்வே மேம்பாலம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனை ஆய்வு செய்வதாக அறிவித்திருக்கிறார்கள். இந்த ஆய்வு எப்போது முடிவுற்று வேலை தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யூர் தொகுதி, செய்யூர்-வந்தவாசி சாலையில் சோத்துப்பாக்கத்தில் இரயில்வே கடவு எண் 74-க்கு பதிலாக இரயில்வே மேம்பாலம் அமைப்பதற்கு ஆய்வுகள் மேற்கொண்டு, இந்த மேம்பாலத்தினை இரயில்வே துறையுடன் இணைந்து செயல்படுத்த வேண்டியிருப்பதால் 2014-2015 ஆம் ஆண்டில் இப்பணியினை எடுத்துக்கொள்வதற்கு இரயில்வே துறைக்குப் பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. இரயில்வே துறையின் அனுமதி பெறப்பட்ட பிறகு மேம்பாலம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி அவர்கள்.

**திரு. வி.எஸ். இராஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேம்பாலம் அமைத்துத் தரப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாக பணிவோடு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.